***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

\- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No.53 / 2021*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 2*** |
| ***Name*** | : | **திரு. செல்வம்** |
| ***Father's Name*** | : | கட்டையன் |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***03.06.2025***

எதிரிகள் *1* முதல் *4* வரை ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தும்பைப்பட்டி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் அனைவரும் எனது உறவினர்கள். இவ்வழக்கில் இறந்து போன விஜயா என்ற பெண்ணும் அவரது குழந்தையும் 1 வது எதிரியின் மனைவி மற்றும் குழந்தை ஆவார்கள். இறந்தவருக்கும் அவரது குழந்தைக்கும எவ்வாறு தீக்காயம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. அவர்கள் இருவரையும் ஆம்புலன்சில் அனுப்பி வைத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் கு.வி.**

போலிசார் விசாரணையின் போது, 1 வது எதிரி, அவரது அண்ணன் மனைவியான 4 வது எதிரியை வைத்துக் கொண்டு, அடிக்கடி குடித்துவிட்டு வந்து, அவரது மனைவி விஜயாவை அடித்துத் துன்புறுத்தியதாகவும், அப்போதெல்லாம் விஜயா கோவித்துக் கொண்டு, அவரது அப்பா அசா1 ன் வீட்டிற்கு வந்துவிடும் என்றும், அப்போதெல்லாம் அசா1 சமாதானம் செய்து அவளது கணவர் வீட்டில் விட்டுவிட்டு வருவார் என்றும் அசா1 ன் மகள் விஜயாவை ஆஜர் 4 எதிரிகளும் பணம், நகை வாங்கி வரும்படி கொடுமைப்படுத்தி வந்ததாகவும், 26.03.2012 ம் தேதி பகல் 12.00 மணிக்கு நான் எங்கள் ஊர் பள்ளிவாசல் தெருவில் போய்க் கொண்டிருந்தே போது, பழனி வீட்டில் அலறும் சத்தம் கேட்டுப் போய் பார்த்தேன் என்றும் அக்கம் பக்கம் உள்ளவர்களளும் ஓடி வந்தார்கள் என்றும் விஜயா அவரது மகள் பிரியதர்ஷினி ஆகியோர் மீது தீ எரிந்து கொண்டிருந்தது என்றும் பக்கத்தில் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய ஆயில் கேனும் குவாட்டர் பாட்டிலில் தயார் செய்யப்பட்ட மண்ணெண்ணெய் விளக்கும் இருந்ததும் என்றும் எல்லோரும் சேர்ந்து விஜயா, பிரியதர்ஷினி ஆகியோர் மீது எரிந்த தீயை அனைத்தோம் என்றும் இருவரது உடல் முழுவதும் தீக்காயங்கள் ஏற்பட்டு விட்டது என்றும் அந்தநேரத்தில் வீட்டில் யாரும் இல்லை என்றும் விஜயா மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்ட போது குாந்தை பிரியதர்ஷினி விஜயாவைக் கட்டிப்பிடித்தததால் பிரியதர்ஷினிக்கும் தீக்காயம் ஏற்பட்டதுள்ளது என்றும் பின்னர் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்தததும் விஜயாவையும், பிரியதர்ஷினியையும் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் நானும் முத்துச்சாமியும் ஏற்றிய போது தகவல் தெரிந்து விஜயாவின் அண்ணன் செல்வம் வந்தார் என்றும் எல்லாரும் சேர்ந்து தீக்காயம் பட்ட விஜயாவையும் பிரியதர்ஷினியையும் மேலூர் அரசு மருததுவமனையில் மதியம் 01.00 மணியைப் போல சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும், அப்போது விஜயாவின் அப்பா துரைராஜ் வந்தார் என்றும் மேலூர் மருத்துவமனையில்

சிகிச்சை அளித்த பின் மதுரை அருசு மருத்துவமனைக்கு துரைராஜீம் அவரது மகன் செல்வமும் மதுரைக்குக் கொண்டு போனார்கள் என்றும் நானும் முத்துச்சாமியும் ஊருக்கு வந்துவிட்டோம் என்றும் மதுரை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த பிரியதர்ஷினி இரவு 11.30 மணிக்கு இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எனது உறவினர்கள் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை